**S.C.No. 137 / 2025**

**PW3 – Tmt. Akila**

**12.01.2026**

**(Accused present)**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

**நேரம் 16.25 மணி**

நான் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரிதான். பூங்கொடி எனக்கு சித்தி உறவுமுறை என்றால் சரிதான். என் அம்மா முத்தம்மாவின் தங்கை என்றால் சரிதான். என் அம்மாவிற்கும், பூங்கொடிக்கும் பூர்வீகம் பாலவாக்கம் என்றால் சரிதான். என் சித்தப்பா மோகன் இறந்தபிறகு பூங்கொடி என் பராமரிப்பில் 25 வருடங்களாக சென்னாகரணி கிராம்ததில் இருந்துவருகிறார் என்றால் சரிதான். பூங்கொடியின் பூர்வீகம் பாலவாக்கம் என்பதால் அவருடைய வீட்டுவிலாசம் பாலவாக்கம் என்றால் சரிதான்.ஆகவே தான் அடிக்கடி பாலவாக்கத்தில் 100 நாள் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கும்போது 06-01-2025 மாலை 3.00 மணியளவில் பாலவாக்கத்திலிருந்து ஏரிக்கு நேரடியாக சென்றாரா என்றால் பாவலவாக்கத்திலிருந்து வரும்போதே ஏரிக்கரைக்கு சென்றார். என் சித்தி பூங்கொடிக்கு ஏரிக்கரையில் நடந்த சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் சித்தி பூங்கொடி ஏரிக்கரையில் விழுந்துகிடந்தார் என்ற விவரம் எனக்கு சேகர் மூலமாக தெரியவந்தது என்றால் சரிதான். அதன்பின்பு தான் சம்பவயிடம் சென்று என் சித்தி பூங்கொடியை பார்த்தேன் என்றால் சரிதான். நான் தகவல் கூறி தான் என் மகள் நீலாவதிக்கு விவரம் தெரியும் என்றால் சரிதான். நீலாவதி வந்தபிறகு தான் நான் என் சித்தி பூங்கொடியை 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து மருத்துவமனைக்கு அழைத்து

சென்றோம் என்றால் சரிதான். நான் சம்பவயிடம் சென்று என் சித்தி பூங்கொடியை பார்த்தபோது பேச்சு, மூச்சு இல்லாமல் கிடந்தார் என்றால் சரிதான். சாட்சி சேகர் பள்ளியில் பள்ளி வாகனம் ஓட்டுகிறார் என்றால் சரிதான். அவருக்கு சம்பவம் பற்றி 4.00 மணிக்கு போன் மூலமாக தகவல் வந்ததாக என்னிடம் கூறினார் என்றால் சரிதான். போலீசார் விசாரணையின்போது எனக்கு சேகர் தகவல் கூறிய விவரத்தை கூறினேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளித்ததை தவிர நான் வேறு எந்த விவரத்தையும் போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கும்போது நீதிமன்றத்தில் கூறியதைபோலவே ராஜா தான் என் சித்தி பூங்கொடியை பாலியல் வன்கொடுமை செய்தார் என்று போலீசாரிடம் கூறியுள்ளேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவயிடம் சென்று பார்க்கும்போது என் சித்தி பூங்கொடி கை, கால்கள் கட்டப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்ததாக கூறியுள்ளளேன். அவ்வாறு போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் சாட்சிம் அளித்ததுபோன்று எதிரி ராஜா தான் என் சித்தி பூங்கொடியை கற்பழித்தார் என்றும், Urine போகுமிடத்தில் கத்தியால் அறுத்துவிட்டார் என்று போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் போலீசார் விசாரணையில் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் முதன்முறையாக ராஜா தான் சம்பவத்தில் ஈடுபட்டதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் நான் சம்பவயிடம் சென்று என் சித்தி பூங்கொடியை பார்த்தபோது மயக்கமாக கிடந்ததாக கூறியுள்ளேன். என் சித்தி பூங்கொடிக்கு எப்போது மயக்கம் தெளிந்தது என்றால் 3 ஆவது நாள் தான் மயக்கம் தெளிந்தது. நான் சம்பவயிடம் சென்று என் சித்தியை பார்த்தபோது அங்கு யாருமில்லை. என் மகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் அப்போது எனக்கு தெரியாது. என் மகள் 40 வயது மதிக்கதக்க ஒரு நபர் சம்பவத்தில் ஈடுபட்டார் என்ற விவரத்தை போலீசாரிடம் கூறியதை கேள்விபட்டேனா என்றால் தெரியும். என் மகள் புகார்கொடுக்கும்போதும், மருத்துவமனையிலோ, என் சித்தி பூங்கொடி

போலீசாரிடமோ, மருத்துவரிடமோ எங்களிடமோ சம்பவம் பற்றி பூங்கொடி எந்த தகவலும், விவரமும் கூறவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிக்கும்போது சம்பவத்திற்கு பின்னர் சம்பவயிடத்தில் என் சித்தி பூங்கொடி எதிரி ராஜா தான் அவரை பாலியல் வன்கொடுமை செய்துவிட்டார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் ராஜா மீது வழக்கு போட்ட விவரம் எனக்கு மறுநாள் தெரியுமா என்றால் 3 ஆவது நாள் தான் தெரியும். அதன்பிறகு போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். எதிரி ராஜா எங்கள் பகுதியில் பிறந்து வளர்ந்தவர் என்றால் சரிதான். அவரை எங்கள் ஊரில் உள்ள எல்லோருக்கும் தெரியும் என்றால் சரிதான். எங்கள் ஊரில் உள்ள விக்னேஷ் என்பவரை எனக்கு தெரியும். சம்பத்தன்று விக்னேஷ் சொல்லி எதிரி ராஜா என் சித்தி ஏரியில் இருப்பது பற்றி தகவல் ஏதேனும் கூறினாரா என்றால் இல்லை. ஆனால் ராஜா கோவில் அருகே வந்தார். என் சத்தி பற்றி எந்த தகவல் எதுவும் என்னிடம்  சொல்லவில்லை. என் சித்தி பூங்கொடிக்கு எதிரி ராஜா யார் என்று தெரியும். சம்பவம் நடந்தஉடனே பாலப்பணி நடைபெறும் இடத்திற்கு சென்று விசாரணை செய்தோமா என்றால் இல்லை. ஆம்புலன்ஸ் வரவழைத்து என் சித்தியை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மருத்துவமனையின் என் சித்தியை அனுமதிக்கும்போது யாரோ அடையாளம் தெரியாத நபர் தான் என் சித்தியை பாலியல் வன்கொடுமை செய்துவிட்டதாக என் மகள் நீலாவதி கூறியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் சித்தியும் அடையாளம் தெரியாத நபர் தான் தன்னை பாலியல் வன்கொடுமை செய்துவிட்டதாக மருத்துவரிடம் கூறினாரா என்றால் எதிரி ராஜா தான் பாலியல் வன்கொடுமை செய்ததாக கூறினார். அப்போது நான் உடனிருந்தேனா என்றால் உடனிருந்தேன். எதிரி ராஜாவின் புகைப்படத்தை மருத்துவமனையில் எனக்கு யார் காட்டியது என்றால் சேகர் என்பவர் காட்டினார். எத்தனை நாட்கள் கழித்து புகைப்படம் காட்டினார் என்றால் 3 ஆவது நாள் காட்டினார். அவருடைய செல்போனிலிருந்து என்னுடைய செல்போனிற்கு ராஜாவின் புகைப்படத்தை அனுப்பினார். சம்பவம்

நடந்த மறுநாள் எதிரி ராஜாவை போலீசார் கைது செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். அதனால் எனக்கு ராஜா தான் மேற்படி சம்பவத்தில் ஈடுபட்டார் என்று போலீசார்சொல்லி தெரியும் என்றால் என் சித்தி சொல்லி எனக்கு தெரியும். நான் பொய் சொல்கிறேன் எ்னறாலும் என் சித்தி சம்பவம் நடைபெற்றத்திலிருந்து 3 ஆவது நாட்கள் மயக்கம் தெளியாமல் இருந்தார்கள் என்றாலும் என் சித்தி சொல்ல வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. என் சித்தி தான் மயக்கம் தெளிந்து சொன்னார்கள். போலீசார் என்னை விசாரிக்கும்போதும் என் சித்தி சொன்னதாக எந்த வவிரம் நானும், என் மகளும் கூறவில்லை என்றால் சரியல்ல.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

பூங்கொடி எவ்வளவு நாள் மயக்கமாக இருந்தார் ?

**<u>பதில்</u>**

3 ஆவது நாள் தான் 10.00 மணிக்கு மயக்கம் தெளிந்தது.

**நேரம் 16.55 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**S.C.No. 137 / 2025**

**PW2 – Tmt. Poongodi**

**12.01.2026**

**(Accused present)**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

**நேரம் 15.55 மணி**

இதற்கு முன்பதாக நான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேனா என்றால் வந்துள்ளேன். இதற்கு முன்பதாக சாட்சியம் கூறியது ஞாபகம் உள்ளது. என் சொந்த ஊர் பாலவாக்கம் ஆகும். என் அக்கா பெயர் முத்தம்மா, என் கணவர் பெயர் மோகன் ஆகும். என் கணவர் இறந்தபிறகு நான் அகிலா வீட்டில் தான் 30 வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். அங்கிருந்து தான் 100 நாள் வேலைக்காக பாலவாக்கத்திற்கு சென்று வருவேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரி ராஜா அவரும் நான் தங்கியிருக்கும் சென்னாகரணி கிராமத்தில் தங்கியிருக்கிறார் என்றால் சரிதான். எதிரி ராஜாவிற்கு சென்னாகரணி என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் 100 நாள் வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு வராமல் நேராக சென்னாகரணி ஏரிக்கு சென்றேன் என்றால் சரிதான். அப்படி வரும்பொழுது பாலவாக்கம் வழியாக வந்தேன் என்றால் சரிதான். பாலவாக்கத்தில் தான் மேம்பாலம் வேலை வடமாநிலத்தவர்கள் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். 100 நாள் வேலையை முடித்துவிட்டு நான் மட்டும் தனியாக வந்தேனா என்றால் தனியாக தான் வந்தேன். என்னுடன் யாரும் வரவில்லை. அன்றைதினம் என் பின்னால் கட்டையால் அடித்தார்களா என்றால் இல்லை. அவர் பளார் பளார் கன்னத்தில் அறைந்தார். அப்படி கன்னத்தில் அறைந்தவுடன் நான் மயக்கமாகி விழுந்துவிட்டேன் என்றால் சரிதான். என்னை அடித்தது ஏரிக்கரையிலா அல்லது ஏரிக்கரை புதருக்கு உள்ளேயே என்றால் ஏரிக்கரைக்கு வரும் வழியிலேயே அடித்தார். அதன்பின்னர் என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா

என்றால் என் புடவையை அவிழ்த்து வாயில் துணியை வைத்து, முகம், கால், கைகளை கட்டி புதரில் கொண்டுவந்துபோட்டு என்னை நாசம்பண்ணி விட்டார். பின்னர் நான் மயக்கமாகிவிட்டேன். அப்போது அவர் கத்தியை எடுத்து Urine போகுமிடத்தில் அவர் அறுத்துவிட்டார். மேற்படி விவரங்களை நான் மருத்துவமனையில் போலீசார் விசாரணையில் கூறினேன். மருத்துவமனையில் என்னை போலீசார் விசாரித்தபிறகு மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு வந்தபிறகு போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். என்னை ஏரியில் அடித்து இழுத்துக்கொண்டு போகும்போது மணி 3.30 இருக்கும். நான் அதற்கு பிறகு அங்கேயே விழுந்து கிடந்தேன். முதன்முதலாக என்னை ஏழுமலை வந்து என்னை பார்த்ததாக என் மகள் கூறி எனக்கு தெரியும். மருத்துவமனைக்கு என்னை ஆம்புலன்ஸில் வைத்து அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். மருத்துவமனையில் எத்தனை மணி நேரம் கழித்து எனக்கு மயக்கம் தெளிந்தது என்றால் மறுநாள் தெளிந்தது. நான் எனக்கு நடந்த சம்பவம் பற்றி நான் மயக்கமாக இருந்ததால் யாரிடம் அதுபற்றி கூறவில்லை என்றால் சரிதான். போலீசார் மருத்துவமனையில் என்னை விசாரித்தபோது என் பின்னால் ஒருநபர் வந்து என் வாயை மூடி என்னை புதருக்குள் தூக்கிசென்றார் என்ற விவரத்தை கூறினேன் என்றால் சரிதான். போலீசார் வந்து என் வாயை பொத்தி தூக்கிக்கொண்டு சென்ற நபர் பற்றி என்னிடம் தெரியுமா என்று கேட்டார்களா என்றால் கேட்டார்கள். அதேபோன்று என் மகள் அகிலாவும், என் பேத்தி நீலாவதி இருவரிமும் தூக்கிக்கொண்டு சென்ற நபர் பற்றி என்னிடம் தெரியுமா என்று கேட்டார்களா என்றால் கேட்டார்கள். எப்போது கேட்டார்கள் என்றால் மயக்கம் தெளிந்த மறுநாள் கேட்டார்கள். ஒருவர் என்னை அடித்து துணியை வாயில் அடைத்து, கை, கால்களை கட்டி புதரில் விட்டு சென்றவிவரத்தை போலீசாரிடமும், முதல் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். அதேபோல் என் Urine போகுமிடத்தில் சின்ன கத்தியை வைத்து அறுத்தார் என்ற விவரத்தை போலீசாரிடம் கூறினேன். நீதிமன்றத்தில் கூறினேனா என்றால் கத்தியை வைத்து அறுத்தார் என்று கூறவில்லை அறுத்துவிட்டார் என்று

கூறியுள்ளேன். எழுமலையை தவிர சம்பவயிடத்தில் எங்கள் ஊர்கார்கள் வேறு யாரையும் நான் பார்க்கவில்லை என்றால் நான் ஏழுமலை மற்றும் யாரையும் பார்க்கவில்லை. சம்பவயிடத்தில் சேகர் என்னை பார்த்ததாக அகிலா எனக்கு தெரிவித்தார். நான் மருத்துவரிடம் அடையாளம் தெரியாத நபர் தான் என்னை வன்புனர்வு செய்தார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். என் பேத்தி நீலாவதி புகார் கொடுக்கும்போதும் யாரோ அடையாளம் தெரியாத நபர் தான் என்னை வன்புனர்வு செய்தார் என்று புகாரில் குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. ஊத்துக்கோட்டை நடுவர் நீதிமன்றத்தில் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை. அன்றைய தினம் நான் நீதிமன்றத்திற்கு செல்லவில்லை. அங்கு கைநாட்டு எதுவும் வைக்கவில்லை. போலீசார் என்னை எங்கும் அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் குவிமுச 164 வாக்குமூலத்தில் உள்ள கைநாட்டு என்னுடையது தானா என்றால் இந்த நீதிமன்றத்தில் முதல் விசாரணையின் போது தான் கைநாட்டு வைத்தேன். போலீசார் என்னை 1 மாதம் கழித்து விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அவ்வாறு விசாரிக்கும்போது ராஜா மீது வழக்கு போட்டிருப்பதாக என்னிடம் கூறினார்களா என்றால் கூறினார்கள். போலீசார் வழக்கு போட்டதால் தான் ராஜா என்னை அவ்வாறு செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். அதனால் தான் நான் நீதிமன்றத்தில் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலீசார் கூறினார்கள். எதிரி ராஜாவை 20, 30 வருடங்களாக எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் பெயர் ராஜா.

**நேரம் 16.25 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**S.C.No. 137 / 2025**

**PW1 – Tmt. Neelavathy**

**12.01.2026**

**(Accused present)**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

**நேரம் 15.05 மணி**

03-01-2026 அன்று இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட நான், என் பாட்டி பூங்கொடி, என் அம்மா அகிலா, ஆஜர் எதிரி ராஜா ஆகியோர் சென்னாகரணி கிராமத்தில் தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். என் பாட்டி பூங்கொடி எந்த ஊரைச்சேர்ந்தவர் என்றால் பாலவாக்கத்தை சேர்ந்தவர். என் பாட்டியின் கணவர் சின்ன தாத்தா இறந்தபிறகு எத்தனை வருடங்களாக சென்னாகரணியில் வசித்து வருகிறார் என்றால் 35 வருடங்களாக வசித்து வருகிறார். என் பாட்டி பூங்கொடியின் வீட்டு விலாசம் முகவரி அனைத்தும் பாலவாக்கம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். என் பாட்டி பூங்கொடி என் பாட்டி முத்தம்மாவின் தங்கை என்றால் சரிதான். எங்கள் ஊரில் உள்ள சென்னாகரணி ஏரிக்கரையில் தான் எங்கள் ஊரைச் சேர்ந்த அனைவரும் இயற்கை உபாதைகளை கழிக்க செல்வார்கள் என்றால் சரிதான். காலை மாலை என இரண்டு வேளையும் ஜனங்கள் போய்கொண்டும், வந்து கொண்டும் இருப்பார்கள் என்றால் சரிதான். 06-01-2025 சம்பவத்தன்று என் பாட்டி பாலவாக்கம் 100 நாள் வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டு சென்னாகரணி ஏரிக்கு சென்றார்களா என்றால் என் வீட்டிற்கு வந்துவிட்டு தான் சென்னாகரணி ஏரிக்கு சென்றார். என் வீட்டிற்கு ஏரிக்கரைக்கும் எவ்வளவு தொலைவு என்றால் அரைகிலோமீட்டர் தூரமிருக்கும். அங்கு நடந்து தான் செல்வோம் என்றால் சரிதான். என் பாட்டி மாலை 4.00 மணிக்கு ஏரிக்கரைக்கு

போனதாக புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். புகாரில் 40 வயது மதிக்கதக்க ஒரு நபர் என் பாட்டியை அடித்து வலுக்கட்டாயமாக தூக்கி சென்று அவரிடம் பாலியலுறவு வைத்துக்கொண்டார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். புகாரில் என் பாட்டிக்கு நடந்த அந்த சம்பவம் பற்றி சாட்சி சேகர் கூறி தான் தெரியும் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். சேகருக்கு மேற்படி விவரம் யார் சொல்லி தெரியும் என்ற விவரத்தை புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு தகவல் கூறினேன் என்றால் 11.00 மணிக்கு தகவல் கூறினோம். ஆம்புலன்ஸ் மாலை 4.00 மணிக்கு வரவழைத்தோம். முதன்முதலில் என் பாட்டியை ஏரிக்கு போய் என் குடும்பத்தில் பார்த்தது யார் என்றால் என் அம்மா அகிலா பார்த்தார். என் அம்மா எனக்கு போன் செய்து கூறி தான் சென்னாகரணிக்கு வந்தேன் சரிதான். அப்போது நான் பாலவாக்கம் கிராமத்தில் இருந்தேன். நான் போய் என் பாட்டியை பார்க்கும்போது என் பாட்டி என்ன நிலையில் இருந்தார்கள் மயக்க நிலையில் இரந்தார்களா அல்லது பேசும் நிலையில் இருந்தார்களா என்று புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் புகாரை யார் எழுதியது என்றால் எனக்கு தெரிந்தவர் எழுதினார். அவர் பெயர் நாகராஜன். நான் சொல்லி தான் விவரங்களை நாகராஜன் எழுதினார். காவல் நிலையத்தில் இரவு 11.00 மணிக்கு புகாரை கொடுத்துள்ளேன். எத்தனை மணிக்கு போலீசார் வழக்கு பதிவு செய்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் என்னிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. புகார் மனுவில் என் பாட்டி துன்புறுத்தலுக்கா ஆளாக்கிய நபரை யார் என்று கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். புகார் கொடுக்கும்போது எந்த நபர் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மருத்துவமனைக்கு என் பாட்டியோடு நானும், என்னுடன் என் தங்கை துளசியும் வந்திருந்தார். மருத்துவமனைக்கு என் பாட்டியை அழைத்து செல்லும்போது சுயநினைவுடன் இருந்தாரா என்றால் இல்லை. என் பாட்டிக்கு என்ன நடந்தது என்ற விவரத்தை மருத்துவரிடம் நான்

தான் கூறினேன் என்றால் சரிதான். மருத்துவரிடம் என் பாட்டியை அடையாளம் தெரியாத நபர் கம்பால் அடித்து புதரில் தள்ளி கற்பழிக்க முயற்சித்தபோது அவரை விட்டுவிட்டு ஓடிவிட்டார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். என் பாட்டியை சம்பவயிடத்திலிருந்தவர்கள் மீட்டு எங்களுக்கு தகவல் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் மருத்துவமனைக்கு என்றைய தினம் வந்தார்கள் என்றால் சம்பவம் நடந்த அன்றே வந்தார்கள். போலீசார் மருத்துவமனைக்கு சிகிச்சை ஆரம்பித்தவுடன் சுமார் 8.00 மணிக்கு வந்தார்கள். சிகிச்சை முடிந்த பிறகு என் பாட்டியை போலீசார் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை. என்னிடமும், என் தங்கை துளசியிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துகொண்டார்களா என்றால் சம்பவம் நடந்த மறுநாள் எங்கள் வீட்டின் அருகில் வந்து விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரிக்கும்போது நான் போலீசாரிடம் 06-01-2025 அன்று மாலை 4.00 மணியளவில் ஒரு ஆண் நபர் என் பாட்டியை ரோட்டிலிருந்து தூக்கிசென்று பாலியல் வன்கொடுமை செய்தார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். என் பாட்டி ஏரிக்கரையில் அழுதுகொண்டிருந்ததாக சேகர் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இரத்தம் வடிந்து கிடப்பதாக தான் சேகர் என்னிடம் கூறினார். சேகருக்கு மேற்படி விவரம் யார் சொல்லி தெரியும் என்று நான் போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். என் பாட்டிக்கு Urine போகுமிடத்தில் இரத்தம் வடிந்தகொண்டிருந்ததை பற்றி புகாரில் கூறவில்லை என்றால் சரிதான். வாக்குமூலத்திலும், புகாரிலும் என் பாட்டி சம்பவம் நடந்த அன்றும், மறுநாள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோதும் சம்பவத்தில் ஈடுபட்ட நபர் யார் என்று என்னிடம் எந்த விவரமும் கூறியதாக கூறவில்லை என்றால் சரிதான். என் புகாரில் ஏழுமலை என்ற நபரை பற்றி அவர் மூலமாக எனக்கு தகவல் கிடைத்தது என்ற விவரம் பற்றி புகாரில் கூறவில்லை என்றால் சரிதான். வழக்கு பதிவுசெய்தவுடன் அரசாங்கத்திலிருந்து ரூபாய் 3 லட்சம் இழப்பீடு கொடுத்தார்களா என்றால் அதுபற்றி என் அம்மாவிற்கு தான் தெரியும். நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளித்தபோது வரும்வழியில் ராஜா என்பவர்

பின்தொடர்ந்து வந்து என் பாட்டியை அடித்து கை, கால்களை கட்டி முட்புதரில் போட்டு வன்கொடுமை செய்துள்ளார் என்று புகாரிலும், வாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரிதான். Urine போகுமிடத்தில் கத்திவை வைத்து அறுத்தி விட்டு கத்தியை போட்டுவிட்டு ஓடிவிட்டார் என்ற விவரத்தை புகாரிலும், வாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரிதான். முட்புதரிலிருந்த என் பாட்டியை சேகரும், ஏழுமலையும் பார்த்து எங்களுக்கு தகவல் கூறியதாக சாட்சியம் அளித்துள்ளேன் அந்த ஏழுமலை தகவல் கூறிய விவரத்தை நான் புகாரில் கூறவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் கிடந்த கத்தியை நான் போலீசாரிடம் எடுத்து ஆஜர் செய்தேனா என்றால் இல்லை. போலீசார் சம்பவயிடத்திற்கு வந்து கத்தியை எடுத்து சென்றார்கள் என்றால் சரிதான். சேகர் என்பவர் பள்ளியல் பள்ளி வாகனம் ஓட்டுகிறார் என்றால் சரிதான். சம்பவத்தன்று பள்ளி வாகனத்தை ஓட்டிசெல்ல 4.00 மணிக்கு இருந்த நிலையில் அவர் எங்களுக்கு தகவல் கூறினார் என்றால் சரிதான். ஏழுமலை, சேகருக்கு சம்பவம் பற்றி தெரியாது என்றால் சரிதான். என் பாட்டி பூங்கொடி புதரில் விழுந்து கிடந்தது தெரியும் என்றால் சரிதான். என் பாட்டி பூங்கொடி எழுமலை மற்றும் சேகரிடம் எதிரி ராஜா அவரை அடித்து கை, கால்களை கட்டி கத்தியால் Urine போகுமிடத்தில் கத்தியை வைத்து அறுத்தார் என்ற விவரத்தை என் பாட்டி எழுமலை மற்றும் சேகரிடம் கூறியதாக நான் சாட்சியம் அளித்துள்ளேன். ஆனால் அதுபோன்ற விவரம் ஏழுமலை மற்றும் சேகருக்கு நேரடியாக தெரியாது. நான் கூறிதான் அவர்களுக்கு தெரியும் என்றால் சரிதான். நெடுஞ்சாலைத்துறை பாலப்பணி அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது என்றால் சரிதான். அந்த சமயத்தில் வடமாநிலத்தவர்கள் வந்து தங்கி வேலை செய்து கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். என் பாட்டி பூங்கொடி நடைபெற்ற சம்பவத்திற்காக பின்னர் வடமாநிலத்தவர்கள் தங்கியிருந்த இடத்திற்கு சென்று கிராமத்தினர்கள் விசாரித்தார்கள் என்றால் இல்லை. என் பாட்டியை போலீசார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்திருந்தபோது ஒருமுறை விசாரித்தார்கள். அதற்கு பின்பு போலீசார் என் பாட்டி பூங்கொடியை போலீசார் விசாரிக்கவில்லை. எதிரிக்கு இந்த

வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என் பாட்டியை போலவே எதிரிக்கும் அப்பா, அம்மா கிடையாது என்றாலும் அவரும் அவருடைய சித்தியின் பராமரிப்பில் இருந்து அதே ஊரில் பிறந்து, வளர்ந்து வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். போலீசார் போட்ட பொய் வழக்கிற்கு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி உண்மையிலேயே சம்பவத்தில் ஈடுபட்டிருந்தால் அவரை பற்றி நன்கு அறிந்திருந்த என் பாட்டி பூங்கொடி அது பற்றி என்னிடத்தில் நிச்சயம் கூறியிருப்பார் என்றால் சரியல்ல.

**நேரம் 15.55 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.